செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 440 நாள் : 22/7/17.

# கல்வித்துறை

## பத்திரிகைச் செய்தி

நாள் 20–07–2017

ஆசிரியர் தகுதித் தேர்வு 2017 தாள்– 2 ஏப்ரல் மாதம் நடைபெற்று முடிந்த ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற பணிநாடுநர்களுக்கு வேலூர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளியில் 24–07–2017 முதல் 27–07–2017 வரை 4 நாட்கள் சான்றிதழ் சரிபார்ப்பு பணி காலை 09.00 மணி முதல் நடைபெறவுள்ளது. சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வருகை புரிய வேண்டியவர்களின் விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இணையதளம் வாயிலாக சான்றிதழ் சரிபார்ப்பிற்குண்டான ஆணையின் நகலினை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அதன் நகலினை ஒதுக்கீடு செய்யப்பட்ட நாள் அன்று சான்றிதழ் சரிபார்ப்பு குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்படுகிறது. சான்றிதழ் சரிபார்ப்பு அன்று ஒப்படைக்கப்பட வேண்டிய ஆவணங்களின் விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது .

இடம் = ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி,
அண்ணாசாலை, வேலூர் 632 001

நாள் = 24–07–2017 முதல் 27–07–2017 வரை

நேரம் = காலை 09.00 மணி முதல்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

செ.ம.தொ.அ.
வேலூர்– 9. 22/7/17